**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 258/2020**

**வா.சா.1 – பாலாமணி**

**<u>05–03–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. கெட்டிமுத்து மகன் ரங்கசாமியின் மகள் தமிழ்செல்வி என்றால் சரிதான். 2012 செட்டில்மெண்ட் ஆவணப்படி தமிழ்செல்வி சொத்தை அனுபவிக்கிறார் என்றால் சரிதான். எனக்கும் சாமிநாதனுக்கும் வாய்க்கால் பிரச்சினை உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் சாமிநாதனுக்கும் பிரச்சினை உள்ளதால் அதனை நாங்களே தீர்த்துக்கொள்ளாமல் தேவை இல்லாமல் 5ம் பிரதிவாதியை சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. ரங்கசாமி கவுண்டரும், அவரது சகோதரரும் 1983 ல் அவரது சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. எனது பாகசாசன பத்திரத்தை நான் பார்துள்ளேனா என்றால் அதில் எங்கள் அப்பாவிற்கும் சொத்து பிரிந்துள்ளது. அதில் க.ச.எண். 448 தென்வடல் இட்டேரியில் இருந்து 443 /1 தெற்குகோட்டில் கிழமேல் வழித்தடத்தில் என்று பொது சராவில் பாகசாசனப்பத்திரத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. அதன் பிறகு 443/1 காலை 443/1ஏ 3 என்று உட்பிரிவாகியுள்ளது என்றால் தெரியாது. 444/2சி4 காலையில் கிழமேல் தடத்தில் அருணாச்சலக்கவுண்டரும், ரங்கசாமி கவுண்டரும் வண்டிவாகனாதிகள் கால் நடைகள் நடந்துகொள்ளலாம் என்று எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வண்டித்தடம் 14 அடி அகலத்தில் இருந்தது என்றால் சரிதான். 448 காலையில் இருந்து ஆரம்பிக்கும் 14 அடி தடத்தை 5ம் பிரதிவாதி ஆரம்பம் முதல் அனுபவித்து வருகிறார் என்றால் அனைவரும் அதைதான் பயன்படுத்துகிறோம். வழக்கு தாக்கல் செய்யும்போது 1ம் பிரதிவாதியும் நானும் சண்டையிட்டு கொண்டதால் 1ம் பிரதிவாதி கல்லும் மண்ணையும் போட்டு

தடத்தை அடைத்துவிட்டார் என்றால் சண்டைபோடவில்லை ஆனால் தடத்தை அடைத்துவிட்டார்கள்.

3. நானும் 1ம் பிரதிவாதியும் எங்களுக்குள் சண்டைபோட்டு விட்டு 5ம் பிரதிவாதி செல்வதற்கு தடம் இல்லாமல் செய்கிறோம் என்றால் சரியல்ல. தமிழ்செல்வி பூமியில் தென்னைமரம் உள்ளது என்றால் அனைவரின் பூமியிலும் உள்ளது. அவரது பூமிக்கும், 5ம் பிரதிவாதியின் பூமிக்கு விவசாய பொருட்களை எடுத்துச்செல்ல முடியாதவாறு நானும் 1ம் பிரதிவாதியும் இடையூறு செய்கிறோம் என்றால் அனைவரும் அந்த தடத்தைதான் பயன்படுத்துகிறோம். 5ம் பிரதிவாதி தடத்தை பயன்படுத்துவதற்கு இடையூறு செய்யவில்லை என்றால் சரிதான்.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.05 17:09:45 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.